Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 022 | புதன்கிழமை Wednesday | 22.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தி.மு.க.வின் ஆட்சி தொடர மீண்டும் ஒரு வாய்ப்பை மக்கள் தருவார்கள்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இறுதிகட்ட வாக்குசேகரிப்பு



சென்னை: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடையும் நிலையில், முதல்வர் ஸ்டாலின் சென்னையில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நாளை மறுதினம் (ஏப்ரல் 23) அன்று நடைபெறுகிறது. தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைவதால், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் நேற்று சென்னையில் பல்வேறு தொகுதிகளில் பிரச்சாரம் செய்த நிலையில், இன்றும் சென்னையில் உள்ள சோழிங்கநல்லூர், வேளச்சேரி, சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

காலையில் நடந்து சென்று வாக்கு சேகரித்த ஸ்டாலின், ஆட்டோ ஓட்டியும், இளைஞர்களிடம் செல்ஃபி எடுத்தும் உற்சாகமாக பிரச்சாரம் செய்தார்.

இதனை தொடர்ந்து சென்னையில் தான் பிரச்சாரம் மேற்கொண்ட புகைப்படங்களை பகிர்ந்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ்பதிவில், 'சென்னை என்றுமே தி.மு.க.வின் கோட்டை. சோழிங்கநல்லூர் – வேளச்சேரி – சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் மக்கள் அளித்த அன்பும் வரவேற்பும்' எனத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட மற்றொரு எக்ஸ் பதிவில், 'டெல்லியின் சர்வாதிகாரம் தமிழ்நாடுக்குள் ஊடுருவாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், நாங்கள் எங்களைப் பாதுகாத்து வருகிறோம். ஜனநாயகத்தைக் காப்பதற்கு, பாசிசத்தைத் தோற்கடிப்பதே ஒரே தீர்வாகும். ஜனநாயகம் மற்றும் அந்த ஜனநாயகத்துக்குள் அடங்கியுள்ள வாக்களிக்கும் உரிமை ஆகியவை அளவற்ற வலிமை வாய்ந்தவை.

ஜனநாயகத்தின் மகத்தான வலிமையின் மீதும், வாக்குச்சீட்டின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட தமிழ்நாடே இறுதியில் வெல்லும். சர்வாதிகாரப் பாதையில் பயணிக்க முயல்பவர்களை இந்தியநாடு நிச்சயம் தோற்கடிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இன்னும் கொஞ்ச நாட்களில் தேர்தல். இந்தச் சமயத்தில் எனக்கு ஒரு விஷயம் மைண்ட்-இல் வருகிறது. 2021ல் இதே போன்று ஒரு சட்டமன்றத் தேர்தல். அந்தச் சமயத்தில் சில பேர் "Stalin is more dangerous than Karunanidhi" என்று சொன்னார்கள். கலைஞரோடு என்னை எப்போதுமே ஒப்பிடமுடியாது.அவரை நான் அப்பா என்று கூப்பிட்டதைவிட, தலைவர் என்று கூப்பிட்டதுதான் அதிகம்.

அப்படிப்பட்ட தலைவரைவிட நான் more dangerous என்று அவர்கள் சொல்லும்போது, எனக்கு ஒன்றே ஒன்றுதான் தோன்றியது. தமிழ்நாட்டை வஞ்சிக்க நினைப்பவர்களுக்கும், நம்முடைய வளர்ச்சியை தடுக்க நினைப்பவர்களுக்கும் நான் என்றைக்குமே டேஞ்சர்தான். இதில் கலைஞரைவிட ஒரு படி மேலே இருக்கிறேன் என்றால், அது எனக்கு பெருமைதானே. ஏனென்றால் இதெல்லாம் நம்முடைய தமிழர்களின் ரத்தத்திலேயே இருக்கிறது என் மீது நம்பிக்கை வைத்து நீங்கள் என்னை முதல்வராக்கி 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. "ஸ்டாலின் சார், முதல்வர் ஆனது எல்லாம் ஓகே... இந்த 5 ஆண்டுகளில் மக்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள்?" என்று யாராவது கேட்டால், நம்மால் மணிக்கணக்காக, ஏன் நாட்கணக்காகக்கூட பேச முடியும். முக்கியமாக எப்போதுமே தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றியஅரசைஎதிர்த்து, தமிழ் மக்களுக்காக சண்டை செய்திருக்கிறேன் என்பதை இன்னும் பெருமையாக என்னால் சொல்லி கொள்ள முடியும். சமூக நீதியுடன்கூடியவளர்ச்சி என்பதுதான் நம்முடைய முதன்மையான குறிக்கோள்.

அந்த வகையில் கர்ப்பிணி பெண்களுக்கு மகப்பேறு உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பேருந்து பயணம், தோழி மகளிர் விடுதி, மக்களைத் தேடி மருத்துவம் என்று, கருவில் இருக்கும் குழந்தையிலிருந்து, வயது முதிர்ந்த மூத்த குடிமக்கள் வரைக்கும் அனைவரும் பயனடைவது போன்று நிறையத் திட்டங்களைக் கொண்டு வந்தோம். "நம்மிடம் காசு இருந்தால் எடுத்து கொள்வார்கள், நிலம் இருந்தால் பிடுங்கிக் கொள்வார்கள். ஆனால் படிப்பை மட்டும் யாராலும் உன்னிடமிருந்து எடுத்து கொள்ளவே முடியாது" என்று ஒரு சினிமாவசனம் இருக்கிறது.

அது நூற்றுக்கு நூறு உண்மை. நான் பதவியேற்றதிலிருந்து மாணவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் இதே கருத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கல்வி ஒன்றுதான் உங்களிடமிருந்து யாரும் திருட முடியாத ஒரே சொத்து. அதனால்தான் பள்ளியில் காலை உணவுத் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப், அரசுப் பள்ளியில் படித்த மாணவ-மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் உதவித் தொகை, 'நான் முதல்வன்' திட்டம் என்று கல்விக்காக மட்டும் இந்த ஆட்சியில் அவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

நீங்கள் எந்த டேட்டாவை வேண்டுமானாலும் எடுத்து பாருங்கள். தொழில்துறை, விவசாயம், கல்வி என்று அனைத்துதுறைகளிலும் தமிழ்நாடு டாப்-இல் இருக்கும். அதற்கு அடையாளமாக 14 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதமாக, எந்த மாநிலமும் தொடாத இரட்டை இலக்கத்தை தொட்டு இருக்கிறது. இன்னும் உயரம் தொடுவோம் என்ற உறுதியும் எனக்கு இருக்கிறது. இப்படி அனைத்து வகையிலும் நாம் முன்னேறி இருந்தாலும், ஒரு சில குறைகளும் இருக்கிறது என்பது எனக்கும் தெரியும்.

. தமிழ்நாட்டில் மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும் என முதல்வர் திட்டவட்டமாக தெரிவித்தார். தமிழ்நாடு முழுவதும் சுற்றி வந்துள்ளேன், அனைத்து தொகுதிகளிலும் மக்கள் அமோக ஆதரவு தெரிவித்தனர் என கூறினார்

# வாக்குரிமை நம் தலையெழுத்தை மாற்றும் ஜனநாயக ஆயுதம்

## சேலத்தில் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம்



சேலம்: "திமுகவினர் 200 தொகுதிகளில் வெற்றிபெறுவோம்என்கின்றனர். ஆனால் அவர்கள் 20 இடங்களில் வெற்றி பெற்றாலே ஆச்சரியம்தான்" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கலந்துகொண்டு பேசினர்.

இந்தக் கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசியது: "இந்த தேர்தல் கருணாநிதி குடும்பத்துக்கு மூடுவிழா நடக்கும் தேர்தல். அண்ணாநகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு தீர்ப்பு கொடுத்தது. அந்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் திமுக அரசு மேல்முறையீடு செய்தது.

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் அருந்தி 68 பேர் உயிரிழந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை கோரி நீதிமன்றத்தை நாடினோம். இந்த வழக்கிலும் சிபிஐ விசாரணை நடத்தக் கூடாது என்று திமுக அரசு மேல்முறையீடு செய்தது. அப்படியென்றால் குற்றவாளிகளை காப்பாற்றுகின்றனர். குற்றவாளிகள் வேண்டப்பட்டவர்கள் என்பதால்தடை வாங்குகிறார்கள். குற்றம் அதிகரிக்க காரணமே திமுக அரசுதான்.

டிரான்ஸ்பார்மர் கொள்முதல் டெண்டரில் ஏழு நிறுவனங்கள் ஒரே விலையைக் குறித்தன. இதில் ஊழல் நடந்துள்ளது என்று சிபிஐ விசாரணைக்கு கேட்டிருக்கிறோம். நீதிமன்றம் உத்தரவிட்டால் செந்தில் பாலாஜி எங்கிருக்க வேண்டுமோ, அங்கே பத்திரமாக இருப்பார்.

திமுக ஆட்சியில் கிட்னி திருடுறார்கள். மனிதாபிமானம் இல்லாமல் ஆட்சி நடக்கிறது. குமாரபாளையத்தில் ஒரு பெண்மணிக்கு கிட்னிக்கு பதிலாக கல்லீரலை எடுத்துவிட்டனர். உடல் உறுப்பை கொள்ளையடிக்கும் அரசு தேவையா? இதுவரை அந்த மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அதிமுக ஆட்சியில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் அருந்தி 68 பேர் உயிரிழந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை கோரி நீதிமன்றத்தை நாடினோம். இந்த வழக்கிலும் சிபிஐ விசாரணை நடத்தக் கூடாது என்று திமுக அரசு மேல்முறையீடு செய்தது. அப்படியென்றால் குற்றவாளிகளை காப்பாற்றுகின்றனர். குற்றவாளிகள் வேண்டப்பட்டவர்கள் என்பதால்தடை வாங்குகிறார்கள். குற்றம் அதிகரிக்க காரணமே திமுக அரசுதான்.

டிரான்ஸ்பார்மர் கொள்முதல் டெண்டரில் ஏழு நிறுவனங்கள் ஒரே விலையைக் குறித்தன. இதில் ஊழல் நடந்துள்ளது என்று சிபிஐ விசாரணைக்கு கேட்டிருக்கிறோம். நீதிமன்றம் உத்தரவிட்டால் செந்தில் பாலாஜி எங்கிருக்க வேண்டுமோ, அங்கே பத்திரமாக இருப்பார்.

உடல் உறுப்பை கொள்ளையடிக்கும் அரசு தேவையா? இதுவரை அந்த மருத்துவமனை மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அதிமுக ஆட்சியில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஜெயலலிதா மறைந்த பின்னரும் கூட எதிர்க்கட்சியாக அதிமுக அமர்ந்தது. ஆனால், 2011 முதல் 2021 வரை பல தேர்தல்களில் திமுக தோல்வி அடைந்தது.

திமுகவினர் 200 இடங்களில் வெற்றி பெறுவோம் என்கின்றனர். ஆனால் அவர்கள் 20 இடங்களில் வெற்றி பெற்றாலே ஆச்சரியம்தான்.

அன்புமணி சொன்னதுபோல், நம்முடன் கூட்டணி இருந்தவர் (பிரேமலதா), எதிரியுடன் கூட்டணி சேர்ந்த பின்னரும் நமக்காக பிரச்சாரம் செய்துள்ளார். எப்போதும் உண்மை உறங்காது, தர்மம் தோல்வியடையாது. எதிரியிடம் போய் கைகோத்து நின்றாலும் உள்ளே இருக்கும் மனம் வெளிப்படுத்துகிறது, நமக்காக குரல் கொடுப்பதற்கு நன்றி.

எப்போது பார்த்தாலும் ஸ்டாலின் 39 எம்பிக்கள் வெற்றி பெற்றோம் என்கிறார். நாடாளுமன்றத்தில் அத்தனை பேரும் பெஞ்சை தேய்க்கிறார்கள். சேலத்தில் பஸ்போர்ட், ராணுவ தளவாட த் தொழிற்சாலைக்கெல்லாம் மத்திய அரசிடம் கேட்டீர்களா? ஸ்டீல் பிளான்ட்டில் 500 ஏக்கரில் ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது, அதையும் திமுக கூட்டணி எம்பிக்கள் அழுத்தம் கொடுத்து பெறவில்லை.

அதிமுக ஆட்சிக்கு வந்ததும் கேபிள் கட்டணம் பாதியாக குறைக்கப்படும். அதிமுக ஆட்சியில் கட்டப்பட்ட தொழிற்சாலைகள் உற்பத்தியை தொடங்கியதால்தான், தமிழகத்தில் தற்போது பொருளாதார வளர்ச்சி அதிகமாக இருக்கிறது.

திமுக ஆட்சியில் தொழில் முதலீடு 1179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 15 லட்சத்து கோடி முதலீடு ஈர்க்கப்பட்டது, என்று பச்சை பொய் சொல்கிறார். இதுகுறித்து வெள்ளை அறிக்கை கேட்டேன், வெள்ளை பேப்பரை காட்டினார் அந்த அமைச்சர்.

1998-ல் அதிமுக பாஜகவோடு கூட்டணியில் இருந்தோம், ஜெயலலிதா வைத்த கோரிக்கையை ஏற்று, மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவுக்கு வாஜ்பாய் அனுமதி கொடுத்தார். அதிமுக தம்பிதுரை சட்டத்துறை அமைச்சராக இருந்து மசோதாவை தாக்கல் செய்தபோது முலாயம் சிங் யாதவ் கட்சியின் எம்பி மசோதாவைப் பிடுங்கி கிழித்து எறிந்தார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# டெல்டா, தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஏப்.27 வரை மிதமான மழை வாய்ப்பு



சென்னை வானலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடக்கு சத்தீஸ்கர் முதல் குமரிக் கடல் வரை தெலங்கானா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழககடலோரமாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் நாளை (ஏப்.22) லேசானது முதல் மிதமான மழையும், ஏப்.23 முதல் 25ம் தேதி வரை லேசான மழையும், ஏப்.26, 27 தேதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (ஏப்.22) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்ப நிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்ப நிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டியும் இருக்கக்கூடும். தமிழகத்தில 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் சிற்றாறில் 4 செ.மீ மழை, சிவலோகத்தில் 2 செ.மீ மழை, திற்பரப்பு,திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு, ஈரோடு மாவட்டம் தாளவாடி ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ மழை பதிவாகியுள்ளது என்று செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# குளோபல் மிஷின் மருத்துவமனை மற்றும் ஜோஹோ கார்ப்பரேஷன் நிறுவனமும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம்

காரைக்குடி குளோபல் மிஷின் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் உள்ள விழா அரங்கில் காலையில் குளோபல்மிஷின்மருத்துவமனை மற்றும் ஜோஹோ கார்ப்பரேஷன் நிறுவனமும் இணைந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த நிகழ்வு குறித்து மருத்துவமனைசேர்மன் குமரேசன் கூறியதாவது Global Mission Hospital, Zoho Corporation உடன் (GZ MediFusion System) என்ற மூலோபாய கூட்டாண்மையை அறிவித்துள்ளது. இந்த கூட்டாண்மை Zoho for Healthcare வழியாக, நோயாளி பராமரிப்புமற்றும்மருத்துவமனை செயல்பாடுகளைமேம்படுத்தும் ஒரு ஒருங்கிணைந்த டிஜிட்டல் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் அமைந்துள்ளது.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, மருத்துவ அமைப்புகளை நவீனமயமாக்கவும் வலுப்படுத்தவும்,Zohoநிறுவனத்தின் மேம்பட்ட தொழில்நுட்பங்களை எங்கள் மருத்துவமனை பயன்படுத்த உள்ளது.



மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறையில் டிஜிட்டல் மாற்றம் மிகவும் அவசியமாகிவரும் நிலையில், குறிப்பாக Ayushman Bharat Digital Mission (ABDM) செயல்படுத்தப்பட்டுவரும் இந்த காலத்தில், குளோபல் மெஷின் மருத்துவமனை Zoho-வைதனது தொழில்நுட்ப கூட்டாளியாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

இந்தத்திட்டம் 40+ கிளினிக்குகள், தற்போதைய மல்டிஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள் மற்றும் 2027-க்குள் நிறைவடைய இருக்கும் இரண்டு சூப்பர்ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகளையும் உள்ளடக்கும்.

50-க்கும் மேற்பட்ட ஒருங்கிணைந்தசெயலிகளைப் பயன்படுத்தி, Zoho for Healthcare குழு அடுத்த 2-3 ஆண்டுகளில் மருத்துவமனை குழுவின் டிஜிட்டல் மாற்றத்தை முன்னெடுக்க உள்ளது. இந்த முயற்சி நோயாளி ஈடுபாட்டை மேம்படுத்தவும்,பணிச்சூழல்களை எளிமைப்படுத்தவும், அனைத்து மையங்களிலும் பணியாளர் திறனை அதிகரிக்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. என்றார். முன்னதாக மரு.குமரேசன்-சேர்மன் (குளோபல் மிஷின் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்) பாலகிருஷ்ணன் ஜோஹோ இயக்குனர் ஆகியோர் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. நிகழ்ச்சியில் ஜோஹோ சுகாதாரதுறை மற்றும் தொழில்நுட்ப இயக்குனர் அமுல்ராஜ் பேச்சிமுத்து மற்றும் நிர்வாகிகள் நிகழ்ச்சி ஒருங்கினைப்பு குளோபல் மிஷின் மருத்துவமனை

# ஹார்முஸ் ஜலசந்தியில் 14 இந்திய கப்பல்களை பத்திரமாக வெளியேற்ற அரசு தீவிரம்



புதுடெல்லி: ஹார்முஸ் ஜலசந்தியில்சிக்கியுள்ள 14 இந்திய கப்பல்களை பத்திரமாக வெளியேற்ற மத்திய அரசு தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது.

இது குறித்து வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில், ஹார்முஸ் ஜலசந்தியில் உள்ள இந்தியக் கப்பல்களின் பாதுகாப்பு குறித்து ஈரான் அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறோம்.

நமது கப்பல்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய ஈரானுடன் நாங்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.மேலும்,தற்போது ஈரானில் இந்திய குடிமக்கள் அதிகஎண்ணிக்கையில் உள்ளனர். அவர்களின் பாதுகாப்பும் நமக்கு மிக முக்கியம்" என்றார்.

மேற்கு ஆசிய நாடான ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து, உலக கச்சா எண்ணெய் வர்த்தகத்தின் முக்கிய பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது. இருப்பினும் சீனா, இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளுக்கு ஈரான் அனுமதி வழங்குகிறது.

மத்தியகிழக்கில்கடந்த பிப்ரவரி 28-ம்தேதிபோர் தொடங்கியதில் இருந்து இந்தியக் கொடி ஏந்திய 10எல்பிஜி மற்றும்எண்ணெய் கப்பல்களை இந்தியா அப்பகுதியிலிருந்து பத்திரமாக வெளியேற்றியுள்ளது.

ஹார்முஸ் ஜலசந்தியில் கடந்த 18-ம் தேதி இந்தியக் கொடியுடன் வந்த 2 கப்பல்கள் மீது ஈரான் ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்தது. இதையடுத்து இந்தத்தாக்குதல் தற்செயலானது என ஈரான் விளக்கம் அளித்தது. ஈரான் அரசு மற்றும் ராணுவம் இடையிலான தகவல் தொடர்பு இடைவெளி காரணமாக இந்த சம்பவம் நிகழ்ந்ததாக தெரியவந்தது.

ஹார்முஸ் ஜலசந்தியில் இந்தியக்கொடி ஏந்திய மேலும் 14கப்பல்கள் சிக்கியுள்ளன. இவற்றில் மூன்று பெரிய எண்ணெய் கப்பல்களும், ஒரு பெரிய எல்பிஜி கப்பலும் அடங்கும். இந்த கப்பல்களை அங்கிருந்து பத்திரமாக வெளியேற்ற மத்திய அரசு தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது.

# லாபத்துடன் நிறைவடைந்த இந்திய பங்கு சந்தைகள்




இந்திய பங்கு சந்தைகள் இன்று காலை வர்த்தகம் தொடங்கியபோது, மெதுவாக மீட்சியடைந்து லாப நோக்கில் முன்னேற்றம் கண்டது. இந்தநிலையில் மாலையில், பங்கு வர்த்தகம் நிறைவடையும்போது, லாபத்துடன் முடிந்தன.

இதன்படி, மும்பை பங்கு சந்தையில் சென்செக்ஸ் குறியீடு 753.03 புள்ளிகள் உயர்ந்து 79,273.33 புள்ளிகளாக நிலை கொண்டிருந்தது. இதேபோன்று தேசிய பங்கு சந்தையில் நிப்டி குறியீடு 211.75 புள்ளிகள் உயர்ந்து 24,576.60 புள்ளிகளாக இருந்தது.

உலகளாவிய சூழலை சந்தை முதலீட்டாளர்கள் தொடர்ந்து எச்சரிக்கையாக கவனித்து வருகின்றனர். அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இன்று 2-வது சுற்று பேச்சுவார்த்தை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், மேற்காசிய பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை தணிவதற்கான சாத்தியம் உள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனை முதலீட்டாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கின்றனர் என வர்த்தக நிபுணர்கள் தெரிவித்தனர். இந்த பேச்சுவார்த்தைகள், எதிர்கால சந்தை நிலவரத்திற்கு முக்கிய பங்கு வகிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



கடலூர் மாவட்டம் திட்டக்குடி தனித் தொகுதி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் அமைச்சர் சி.வெ. கணேசன் அவர்கள் திட்டக்குடி நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் இன்று நேரடியாக சென்று தனது இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

# கோவையில் முதல் முறையாக

## முழுமையான பயண உபகரணங்கள் கிடைக்கும் வகையில் புதிய விற்பனை அங்காடியான 'கோங்கு டூரிஸ்டர்' எனும் நிறுவனம் துவக்கப்பட்டது

## தரமான பேக் வகைகள், சூட்கேஸ்கள் விற்பனைக்கு கொண்டு வரபட்டுள்ளது



தென்னிந்தியாவில் முதன்முறையாக, சிவா ட்ரேடிங் ஹவுஸ் மற்றும் JGG நிறுவனங்களின் சார்பில் பயண உபகரணங்கள் மற்றும் முழுமையான பயண தீர்வுகளை ஒரே இடத்தில் வழங்கும் புதிய ரீட்டெயில் பிராண்டான 'கோங்கு டூரிஸ்டர்' எனும் நிறுவனம், கோவை சாய்பாபா காலனியில், தனது பிரத்யேக அங்காடியை துவக்கியுள்ளது. இதனை, இந்திய தொழில் வர்த்தக சபை தலைவர் ராஜேஷ் பி.லுந்த் ரிப்பான் வெட்டி தொடங்கிவைத்தார். மேலும் கோங்கு டூரிஸ்டர் நிறுவனத்தின் இயக்குனர்கள் நடராஜன், கோவிந்தகிருஷ்ணன், கிருஷ்ணகுமார், மகாதேவன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

கோவையை தலைமையிடமாகக் கொண்ட இந்த நிறுவனம், சுற்றுலா பயணிகள், பிசினெஸ் டிராவலர்கள் மற்றும் விடுமுறை பயணிகளின் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு நீடித்த தரமான ட்ராலிகள் மற்றும் சூட்கேஸ்கள், பேக்க்பேக், லேப்டாப் பேக், டஃபிள் பேக், ஸ்மார்ட் வாட்ச் உள்ளிட்ட பயணத்திற்கு ஏற்ற டெக் சாதனங்கள், பயணத்திற்கும் உடற்பயிற்சிக்கும் ஏற்ற உடைகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலா திட்டங்கள், மேலும் நெக் பிலோ, டிராவல் அடாப்டர்கள், ஆர்கனைசர்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உபகரணங்கள் அனைத்தும் கிடைக்கின்றதாக தெரிவித்தனர்.

வாடிக்கையாளர்களுக்கு உயர்தரமான தயாரிப்புகளை வழங்கும் நோக்கில், ஜிப், வீல் போன்றவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து பயன்படுத்துகின்றதாகவும், எங்கள் அனைத்து தயாரிப்புகளுக்கும் ஒரு ஆண்டு உற்பத்தி உத்தரவாதம் வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்தனர். 2,000 முதல் ரூ.23,000 வரை பல்வேறு விலை வரம்புகளில் எங்களின் தயாரிப்புகள் கிடைக்கின்றதாகவும், தரமும், நீடித்த பயனும், விலைக்கேற்ற மதிப்பும் இங்கு விற்பனை செய்ய படும் பொருட்கள் மீது உத்திரவாதம் அளிக்கப் படுகின்றதாக தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்களிடையே வரவேற்பை பெற்ற விழிப்புணர்வு பிரச்சாரம்




நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் நடைபெற உள்ள *சட்டமன்றத் தேர்தலில் சதவீதம் வாக்குபதிவை வலியுறுத்தி* தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் பல்வேறு வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் தளிர்விடும் பாரதம் சீனிவாசன் தலைமையில் விழிப்புணர்வு பேரணி* நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இன்றைய நிகழ்வில் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி *என் வாக்கு என் உரிமை, வாக்களிப்பது ஜனநாயக கடமை, வாக்காளர் என்றால் வாக்களித்தால் மட்டுமே பெருமை* என்பன உள்ளிட்ட *தேர்தல்விழிப்புணர்வு வாசகங்கள்* அடங்கிய *பதாகைகளை சின்னப்பாநாயக்கன்பாளையம், காவேரி நகர், சரஸ்வதி தியேட்டர் சாலை, ஆனங்கூர் பிரிவு, ஜே.கே.கே.சுந்தரம் காலனி, அய்யன் தோட்டம்* உள்ளிட்ட நகரின் முக்கிய பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் வீடுகளில் வைக்கப்பட்டு *அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தபட்டது.

100 சதவீதம் தேர்தல் வாக்குபதிவு பற்றி தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையினருக்கு பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் பாராட்டுகளை தெரிவித்தனர். நிகழ்வில் தளிர்விடும் பாரதம் செயலாளர் பிரபு, வரதராஜன், தமிழ்செல்வி, சரண்யா* உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கோவையில் உள்ள அனைத்து தொகுதிகளிலும், உள்ள வாக்காளர்களுக்கு வாரி இறைக்கபடும் பணம்!

## தமிழக முற்போக்கு மக்கள் கட்சி வேட்பாளர் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் பரபரப்பு பேட்டி



கோவை கவுண்டம்பாளையம் சட்ட மன்ற தொகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் வழக்கறிஞர் புஸ்பாணந்தம்.

இவர் இன்று செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது..

கடந்த 15 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகளை இலவசமாக வழங்கி வருகின்றதாகவும்,

தற்போது கவுண்டம்பாளையம் சட்ட மன்ற தொகுதியில், சிலிண்டர் சின்னத்தில் போட்டிட்டு வருகிறேன். தற்போது கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும், திமுகவினர், மற்றும் அதிமுகவினர்வீடுவீடாகசென்றுவாக்காளர்களுக்கு ரூபாய், 1000 முதல் 2500 ரூபாய் வரையிலும் வழங்கி வருகின்றனர்.குறிப்பாககோவைவடக்குதொகுதியில் 5000ரூபாய்வழங்கபட்டுவருகின்றது.இதனைதேர்தல் ஆணையம் கட்டுபடுத்த முடியாமலும், தடுக்க முடியாமலும் இருக்கும் நிலை உள்ளது. எனவே நியாயமானமுறையில்இந்ததேர்தல்நடக்கவேண்டும் கோவை மாவட்டத்தில் பணம் பட்டுவாடா செய்யும் பணிகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்க்கு இது சம்பந்தமாக, பேக்ஸ் மூலம் புகார் மனு அளிக்க பட்டுள்ளது என தெரிவித்தார். ஓட்டுக்கு பணம் என்ற நிலையை கோவையில் திமுக, அதிமுக இரு பெரிய கட்சிகளும்செய்துவாக்காளர்களைவிலைகொடுத்து வாங்கிவருகின்றனர். திராவிட கட்சிகளின் இத்தகைய செயல்,ஜனநாயகவிரோதசெயலாககருதுவதாகவும், இது குறித்து மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான பவன்குமாரிடம் புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்க படவில்லை, ஆனால் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளோ இத்தகைய பணம் வழங்குபவர்களை கண்டு கொள்ளாமல், சாலையில் அப்பாவி பொதுமக்களையும், வியாபாரிகள் கொண்டு செல்லும் பணத்தை பிடித்து தனது பணியை திறம் பட செய்து விட்டதாக காட்டி கொள்கின்றது என தெரிவித்தார். எனவே வாக்காளர்களுக்கு பணம் தரும் கட்சிகாரர்கள், மற்றும் ஜனநாயகத்திற்கு எதிராக வாக்குக்கு பணம் பெறும் வாக்காளர்கள் என அனைவரின் மீதும் பாரபட்சமுமின்றி நடவடிக்கை எடுக்க தலைமை தேர்தல்அதிகாரிஉரியநடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று கேட்டு கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுவையில் கனரக வாகனங்களால் தொடர் விபத்துகள் – பொதுமக்கள் அச்சம்



புதுவை மாநிலத்தில் கனரக வாகனங்களால் ஏற்படும் தொடர் விபத்துகள் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது.சமீபகாலமாகதமிழகத்திலிருந்துபல்வேறு ஒப்பந்த பணிகளுக்காக 100-க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் புதுவை மாநிலத்திற்குள் நுழைந்து, வேலை நாட்களில் முக்கிய சாலைகளில் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் இயக்கப்படுகின்றன.இதன் விளைவாக தொடர்ந்து விபத்துகள் நடைபெற்று வருகின்றன.

காவல் துறை கண்காணிப்பில் இருந்தாலும், விதிமுறைகளை மீறும் வாகனங்களிடம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். மேலும், விபத்துகளை ஏற்படுத்திவிட்டு சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் பாதிக்கப்பட்டவர்களை மிரட்டும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

இதனால், வேலை நாட்களில் கனரக வாகனங்கள் இயக்கத்துக்கு கட்டுப்பாடு விதிக்கவும், உரிய ஆவணங்களுடன் மட்டுமே வாகனங்கள் இயக்கப்படுகிறதா என தொடர்ந்து ஆய்வு செய்து, விதிமுறைகளை மீறுபவர்களுக்கு கடுமையான அபராதம்மற்றும்சட்டநடவடிக்கைஎடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விவசாயி கொலையில் 6 பேருக்கு ஆயுள்

தருமபுரி: தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் ஊத்துப்பள்ளம் சிவாடி காட்டு வளவு பிரிவு சாலை பகுதியைச் சேர்ந்தவர் சரவணன் (45). அதே பகுதியைச் சேர்ந்தவர் முனுசாமி.

இவர்கள் இருவருக்கும் விவசாய நிலம் தொடர்பாக முன் விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் கடந்த 2022 ஆக.4-ம் தேதி



சரவணனை முனுசாமி, அவரது உறவினர்கள் நவீன், காமராஜ், விஜயன், முத்து, மாதேஷ் ஆகியோர் தாக்கியதில் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பாக தொப்பூர் போலீஸார் பதிவு செய்த வழக்கு தருமபுரி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கின் விசாரணை முடிவுற்ற நிலையில், குற்றம் சாட்டப்பட்ட 6 பேருக்கும் ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.5,000 அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

# வாசுதேவநல்லூர் தொகுதியில் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி தீவிர பிரச்சாரம்

## மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் ஆதரவு திரட்டினார்



வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புளியங்குடி பகுதியில் இன்று பாஜக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் உற்சாகமான தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது.

இதில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டு பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமிக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

புளியங்குடி சிந்தாமணி பகுதியில் இருந்து காமராஜர் சிலை வரை மிகப்பெரிய ரோடு ஷோ நடத்தி பொதுமக்களிடம் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆதரவு கோரினார். அப்போது அவர் பேசுகையில்,

தமிழகத்தில் சட்டம் -ஒழுங்கு சீர்கெட்டு விட்டது. இதற்கு முதல்வரும் அவரது மகனும் தான். தமிழகத்தில் திமுக மீண்டும் ஆட்சிக்கு வர விடாமல் தடுக்க வேண்டும். மக்கள் அனைவரும் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதியில் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மண்ணின் மைந்தர் ஆனந்தன் அய்யாசாமியை வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பிற்பகலில் நடந்த பிரச்சாரத்தில் வெற்றி வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி, தனது பிரத்தியேக வாக்குறுதிகளை மக்களிடையே விளக்குக் கூறி வாக்கு சேகரித்தார். அவர் பேசுகையில், பெண்கள் மன அழுத்தமின்றி, ஆரோக்கியமாகவும், தன்னம்பிக்கையுடனும் வாழ வேண்டும். அதற்காக வாசுதேவநல்லூர் தொகுதியில் பெண்களுக்கென பிரத்தியேக பெண்கள் புத்துணர்வு மையங்கள் அமைக்கப்படும். இந்த மையங்களில் யோகா, உடல்நல ஆலோசனை, மனநல வழிகாட்டல், திறன் மேம்பாட்டு பயிற்சி, சுயதொழில் பயிற்சி உள்ளிட்ட வசதிகள் வழங்கப்படும். மேலும், இளைஞர்களும் பொதுமக்களும் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் உடற்பயிற்சி மையங்கள் உருவாக்கப்படும். ஜிம் வசதி, யோகா பயிற்சி, பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான உடல்நல பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, அனைவரும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்," என்றார்.

பெண்கள் முன்னேற்றமும் இளைஞர் ஆரோக்கியமும் எனது தேர்தல் வாக்குறுதியில் முக்கிய இடம் பெற்றுள்ளது. மக்கள் நலனே என் அரசியல் நோக்கம், என்று கூறி மக்களிடம் ஆனந்தன் அய்யாசாமி ஆதரவு கோரினார்.

இந்த பிரச்சார நிகழ்வில் பாஜக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு உற்சாக ஆதரவை வெளிப்படுத்தினர்.

### தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 தேர்தல் பிரசாரங்கள் இறுதி கட்டத்தையொட்டி

# சட்டவிரோத பணப்பட்டுவாடா மற்றும் தேர்தல் நடத்தை விதி மீறல்களை தடுக்கும் பொருட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மாவட்டம் முழுவதும் தீவிர இரவு ரோந்து



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 கடந்த 15.03.2026ம் தேதி தேர்தல் கமிஷனால் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் தேர்தல் விதிமுறைகள் அமலுக்கு வந்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளையும் கண்காணிக்கும் பொருட்டு தேர்தல் பறக்கும் படைகள் (FST-27) மற்றும் நிலையான கண்காணிப்பு குழு (SST-24) அமைக்கப்பட்டு ஈரோடு மாவட்ட காவல் துறையினர் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினரை மேற்கண்ட குழுக்களில் நியமித்து தீவிரமாக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தேர்தல் வாக்கு பதிவு வருகின்ற 23.04.2026ம் தேதி நடைபெற இருப்பதால், சட்டவிரோத பணப்பட்டுவாடா மற்றும் தேர்தல் நடத்தை விதி மீறல்கள் இல்லாமலும், எந்தவித அசம்பாவிதம் நடைபெறாமலும் வாக்கு பதிவு அமைதியான முறையில் நடைபெற, 20.04.2026ம் தேதி முதல் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி, தலைமையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் இரவு ரோந்து பணி இரண்டு சிப்டுகளாக ரிக்கப்பட்டு 5 உட்கோட்ட பகுதிகளிலும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளபட உள்ளது என்று ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறாததற்கு எதிராக உ.பி. முதல்வர் யோகி நடைபயணம்



மகளிர் இடஒதுக்கீடு மசோதா மக்களவையில் தோல்வியடைந்ததற்கு எதிராக, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் நடைபயண போராட்டம் நடத்தினார். மக்களவையில் எதிர்க்கட்சிகளின் ஆதரவு இல்லாததால், ஏப்ரல் 17-ஆம் தேதியன்று மகளிர் இடஒதுக்கீடு இதற்கு எதிராக உத்தரப் பிரதேச மாநில பாரதிய ஜனதா கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஜன் ஆக்ரோஷ் மகிளா பாதயாத்திரை' (மக்கள் சீற்ற மகளிர் நடைபயணம்) நிகழ்வில், முதல்வர் யோகி ஆதித்யநாத், பாஜக மாநிலத் தலைவர் பங்கஜ் சவுத்ரி மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

முதல்வரின் இல்லத்திலிருந்து சட்டப்பேரவை வரை நடைபெற்ற இந்த நடைபயணத்தில், பெண் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்வில், முதல்வர் யோகி ஆதித்யநாத் எதிர்க்கட்சிகளை நோக்கிப் பல கேள்விகளை எழுப்பினார். இந்த நடைபயணத்திற்காக பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்த நடைபயணம் குறித்து பேசிய உத்தரப் பிரதேச அமைச்சர் ஆஷிஷ் படேல்,"நாட்டின் பெண்களுக்கு அவர்களின் உரிமைகள் கிடைக்கக்கூடாது என்ற, பெண்களுக்கு எதிரான அறிவிக்கப்படாத ஒரு நிகழ்ச்சி நிரலை எதிர்க்கட்சிகள் வகுத்துள்ளன. 2023-ஆம் ஆண்டில் இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, அனைத்துக் கட்சிகளும் இணைந்து அதன் செயலாக்கத்தை முன்னெடுத்தபோது, எவ்விதமான சர்ச்சையும் எழவில்லை. ஆனால், இந்த மசோதாவை நடைமுறைக்குக் கொண்டுவரும் போது, எதிர்க்கட்சிகள் அதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டன. நாட்டின் பெண்கள் தங்களுக்குரிய உரிமைகளைப் பெறக்கூடாது என்பதே, பெண்களுக்கு எதிரான அவர்களின் அறிவிக்கப்படாத மறைமுகத் திட்டமாகும்" என்றார். துணை முதல்வர் பிரஜேஷ் பதக் கருத்து தெரிவிக்கையில், "எதிர்க்கட்சிகள் பெண்கள் தடுத்து நிறுத்திய விதம் மிகவும் வருத்தமளிக்கிறது. இது குறித்துப் பெண்கள் மிகுந்த கோபத்தில் உள்ளனர். இதற்கான விலையை வரவிருக்கும் தேர்தல்களில், சமாஜ்வாதி கட்சியும், காங்கிரஸும் நிச்சயம் கொடுப்பார்கள்" என்றார்.

# ஆம்னி பேருந்துகள் அதிக கட்டணம் வசூல் செய்தால் நடவடிக்கை; போக்குவரத்துத்துறை எச்சரிக்கை



சென்னை: சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் எச்சரித்துள்ளது. போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் ஏப். 23 அன்று நடைபெறுவதை முன்னிட்டு (21.04.2026 முதல் 26.04.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் அடங்கிய சிறப்புக்குழு அமைக்கப்பட்டு, அவ்வாறு இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அனுமதிரத்து போன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக தெரியவந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்காணும் அலைப்பேசி எண்கள் மூலம், வாட்ஸ் ஆப் / குறுஞ்செய்தி / குரல் பதிவு மூலமாக புகார் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

துணைப்போக்குவரத்து ஆணையரகம், சேலம் 78456 36423

துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு 80569 40040

துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி 90660 32343

துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் 90257 23800

துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி 96981 18011

துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் 95850 20865



# திமுக பணத்தை நம்பி தேர்தலில் நிற்கிறது, நான் மக்களை நம்பி தேர்தலில் நிற்கிறேன்

## மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் சரவணன் பேட்டி

தராசு போல அதிமுக - திமுகவை மக்கள் நிறுத்தி பார்த்து வாக்களிக்க வேண்டும். வாக்குக்காக 1,500 பணம் வாங்குவதால் நாள் ஒன்றுக்கு 82 பைசாவுக்காக விலை போக வேண்டுமா?, கோ.தளபதி பணத்தை நம்பி தேர்தலில் நிற்கிறார், நான் மக்களை நம்பி தேர்தலில் நிற்கிறார். மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என டாக்டர் பா.சரவணன் பேட்டி

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் டாக்டர் பா. சரவணன், நடிகர்கள் ரவி மரியா, கஞ்சா கருப்பு ஆகியோருடன் இணைந்து செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது டாக்டர் பா. சரவணன் பேசுகையில் "அதிமுகவின் வெற்றி வேட்பாளராக மதுரை வடக்கு தொகுதியில் போட்டியிடுகிறேன். திமுக 2021ல் 505 வாக்குறுதிகளை வழங்கியது, ஆனால், 15 சதவீத வாக்குறுதிகளை மட்டுமே நிறைவுற்றியது, நீட் தேர்வை ரத்து செய்வோம் என திமுக அரசியல் செய்தது. ஆனால், அதிமுக எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் 7.5 சதவீத திட்டத்தால் 3600 மருத்துவ மாணவர்கள் பயன்பெற்று உள்ளனர், அதிமுக சாமானிய மக்களுக்கான வாக்குறுதிகளை தந்துள்ளது, திமுக ஆட்சியில் மக்களுக்கான வரியும், கட்டணமும் உயர்ந்துள்ளது. வண்டியூர் பூங்காவில் எம்.எல்.ஏ தளபதி பினாமி லெயரில் கட்டணம் வசூல் செய்கிறார், மதுரை வடக்கு தொகுதியில் குடிநீர், பாதாள சாக்கடை திட்டங்கள் நிறைவேற்றவில்லை. மதுரை மாவட்டத்தில் அதிமுக ஆட்சி காலகட்டத்தில் மட்டுமே திட்டங்கள் கொண்டு வரப்பட்டது. திமுக ஆட்சியில் கலைஞர் நூலகம், ஜல்லிகட்டு மைதானம் ஆகியவை மட்டுமே கொண்டு வரப்பட்டது. அதிமுக ஆட்சி அமைந்தவுடன் மக்களுக்கான திட்டங்கள் கொண்டு வரப்படும், திமுக வேட்பாளர் தளபதி 5 ஆண்டுகளில் தொகுதி பக்கம் வரவேயில்லை. மீண்டும் தேர்தலில் வெற்றி பெற வாக்குக்கு 1,500 கொடுக்கிறார். கோ.தளபதி திருமங்கலம் பகுதியில் குவாரிகளை நடத்தி இயற்கை வளங்களை அழித்து வருகிறார். கோ.தளபதி தனது மகன் துரை.கோபால்சாமி பெயரில் குவாரி நடத்துகிறார். நான் வடக்கு தொகுதியில் மருத்துவ உதவி உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்கிறோம், தமிழ்நாட்டில் அதிமுக ஆட்சி அமைய போகிறது, ஆகவே, வடக்கு தொகுதி மக்கள் அதிமுகவை வெற்றி பெற செய்ய வேண்டும், இதனால் வடக்கு தொகுதி வளர்ச்சி பெறும், வடக்கு தொகுதி வாக்காளர்கள் பணமா! குணமா! என பார்த்து வாக்களிக்க வேண்டும், திமுக கொடுக்கும் பணத்திற்க்காக மக்கள் அவர்களுக்கு வாக்களிக்க கூடாது, தராசு போல அதிமுக - திமுகவை மக்கள் நிறுத்தி பார்த்து வாக்களிக்க வேண்டும். அதிமுக அரசு அறிவித்த திட்டங்களும், வடக்கு தொகுதி மக்களுக்காக நான் அறிவித்த திட்டங்களும் செயல்படுத்தப்படும், மேலும், வடக்கு தொகுதி மக்களுக்காக சிறப்பு நிதி பெற்று திட்டங்களை நிறைவேற்றுவேன். வடக்கு தொகுதியில் திமுக மக்களை விலைபேசி பணம் அளித்து வருகிறார்கள். வாக்குக்காக 1,500 பணம் வாங்குவதால் நாள் ஒன்றுக்கு 82 பைசாவுக்காக விலை போக வேண்டுமா?, கோ.தளபதி பணத்தை நம்பி தேர்தலில் நிற்கிறார், நான் மக்களை நம்பி தேர்தலில் நிற்கிறார். மக்கள் சந்தித்து வாக்களிக்க வேண்டும்" என பேசினார்.



195-திருப்பரங்குன்றம் மற்றும் 196-திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான பொதுப் பார்வையாளரா் திரு. மிங்மா டி. ஷெர்பா அனைவரையும் உள்ளடக்கிய, பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வாக்குப்பதிவு செயல்முறையை முன்னெடுப்பதற்கான தயார்நிலையை ஆய்வு செய்யும் வகையில், திருமங்கலம் மற்றும் திருப்பரங்குன்றம் தொகுதிகளிலும் அமைந்துள்ள மாதிரி வாக்குச்சாவடிகளில் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, 196-திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியின் கீழ் வரும் சிவராக்கோட்டை, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் அமைந்துள்ள மாதிரி வாக்குச்சாவடிஎண்181இல்,நிலையானமற்றும்பசுமையானதேர்தல்நடைமுறைகளுக்கான தனது உறுதிப்பாட்டைச் அடையாளப்படுத்தும் விதமாக, அவர் ஒரு வேப்பங்கன்றை நட்டு வைத்தார்.

### மலை கிராமங்களில் உள்ள தாளவாடி மற்றும் ஆசனூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கிராமங்களுக்கு

# மாற்றுப்பாதை வழியாக கனரக இயந்திரங்களை இயக்க நடவடிக்கை



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல், 2026-வாக்குப்பதிவு 23.04.2026-ஆம் தேதி அன்று நடைபெற உள்ளதால், ஈரோடு மாவட்டம் 107.பவானிசாகர் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மலை கிராமங்களில் உள்ள தாளவாடி மற்றும் ஆசனூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கிராமங்களுக்கு, தேர்தல் தளவாடங்களை தேர்தல் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் கோவை-மைசூர் தேசிய நெடுஞ்சாலை (948)ல் சத்தியமங்கலம், பண்ணாரி, திம்பம் மலை பாதை வழியாக எடுத்துச்சென்று வரவேண்டியுள்ளது. மலைபாதையில் அதிக பாரமேற்றிய கனரக வாகனங்கள் அடிக்கடி பழுதாவதால் வாகன போக்குவரத்து தடை ஏற்படுகிறது. இச்சூழலில் வாக்குப்பதிவுக்கான தேர்தல் தளவாடங்களை தடையின்றி எடுத்துச் செல்லும் பொருட்டு மேற்படி தேசிய நெடுஞ்சாலையில் கனரக வாகனங்களின் உள்நுழைவு மற்றும் வெளியேறும் போக்குவரத்து வருகின்ற 22.04.2026-ஆம் தேதி முதல் 24.04.2026-ஆம் தேதி வரை தடைசெய்து மேற்கண்ட இரு நாட்களுக்கு மாற்றுப்பாதை வழியாக கனரக இயந்திரங்களை இயக்க மாவட்ட நிர்வாகம் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழக சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு

# ஈரோடு மாவட்ட காவல் துறை, மத்திய பாதுகாப்பு படையினர், பிற மாநில காவல்துறை, ஊர்காவல் படையினர் மற்றும் முன்னாள் ராணுவ மற்றும் காவல்துறையினர் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்




தமிழக சட்டமன்ற பொது தேர்தல் வாக்குப்பதிவுவருகின்ற23.04.2026 ம் தேதி நடைபெறவுள்ளது. இத்தேர்தல் வாக்குப்பதிவின் போது பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கவும் மற்றும்பொதுமக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்கும்விதமாகமாவட்டத்தில் உள்ள 8 சட்ட மன்ற தொகுதிகளான 98–ஈரோடு கிழக்கு, 99–ஈரோடு மேற்கு, 100–மொடக்குறிச்சி, 103 பெருந்துறை, 104 பவானி, 105–அந்தியூர்,106–கோபி மற்றும் 107– பவானிசாகர் ஆகிய சட்ட மன்ற தொகுதிகளில், 946 இடங்களில் உள்ள 2340 வாக்குச்சாவடிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V. கிரண் ஸ்ருதி, இ.கா.ப., அவர்கள் மேற்பார்வையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் துணை கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் என 1697 மாவட்ட காவல்துறையினர், 9 மத்திய பாதுகாப்பு படையைச்சேர்ந்த அணிகள்,3 தமிழ்நாடுசிறப்புகாவல்படையை சேர்ந்த அணிகள், 263 ஊர்காவல் படையினர் மற்றும் 482 முன்னாள் ராணுவ மற்றும் காவல்துறையைச் சேர்ந்தவர்கள், 1050 பிற மாநில காவல்துறை மற்றும் ஊர்காவல் படையினர் இணைந்து வாக்குச்சாவடிபாதுகாப்புமற்றும் சட்டம் –ஒழுங்கு பணியில் ஈடுபட உள்ளனர். அதில் ஒரே இடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகள் உள்ள இடங்களுக்கும் மற்றும் 56 பதற்றமான வாக்குச்சாவடி மையங்கள் என கண்டறியப்பட்ட இடங்களுக்கும் ஆயுதமேந்திய மத்திய பாதுகாப்பு படையினரை பாதுகாப்பு பணிக்காக நியமிக்கப்பட உள்ளனர். மேலும் சட்டமன்ற தொகுதிகளுக்கும் பிரத்யேகமாக நியமிக்கப்பட்ட 8 காவல் ஆய்வாளர்களின் (SEGMENT INSPECTORS) மேற்பார்வையில் 206 மொபைல் குழுக்களாக வாக்குசாவடி பணியில் ஈடுபட உள்ளனர்.

தேர்தல் வாக்குப்பதிவு முடிந்தவுடன் அனைத்து வாக்குபதிவு எந்திரங்களும்பாதுகாப்பாகஎடுத்துச்செல்லப்பட்டு,வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடங்களான அரசு பொறியியல் கல்லூரி (IRTT), சித்தோடு மற்றும் கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வைக்கப்படவுள்ளது. வாக்கு எண்ணிக்கை நாளான 04.05.2026 ம் தேதி வரை வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளுக்கும் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை கண்காணிக்க 652 காவல்துறையினர் என மூன்று அடுக்கு பாதுகாப்பு வழங்க

மாவட்ட காவல்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (21.4.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது எடுத்த புகைப்படம்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026, 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் தேர்தல் பொது பார்வையாளர்கள், தேர்தல் செலவினப்பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர் ஆகியோர் முன்னிலையில் நேற்று (21.04.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (ROs) மற்றும் தொடர்புடைய அலுவலர்களுடன் வாக்குப்பதிவு நாளுக்கான மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து முன்னேற்பாடு பணிகள் குறித்து விரிவாக பரிசீலிக்கப்பட்டு தேவையான வழிகாட்டுதல்கள் வழங்குதல் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர் எம் .சிவபாலன் அந்தியூர் அருகே தாசிலூர் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். வேட்பாளர் சிவபாலன் அவர்களை தாசிலூர் கிராம பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்றனர்.இந்த நிகழ்வில் திமுக கூட்டணி கட்சிகள் கலந்து கொண்டு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி சுயேச்சை வேட்பாளராக களம் காணும் சேக் தாவூத், அரசியல் கட்சிகளுக்கு இணையாக பிரச்சாரம் செய்து வருகிறார். அந்தியூரின் முக்கிய பகுதிகளான ஜி.ஹெச். கார்னர், பேருந்து நிலையம் மற்றும் தவிட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் பொதுமக்களிடம் தனது 'நெக்லஸ்' சின்னத்திற்கு ஆதரவு திரட்டி அவர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் தேர்தல் பொது பார்வையாளர்கள், தேர்தல் செலவினப்பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர் ஆகியோர் முன்னிலையில் நேற்று (21.04.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்று வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி பணியாளர்கள் (Polling Personnel), தேர்தல் நுண்பார்வையாளர்கள் (Micro Observers) மற்றும் காவல் துறையினர் (Police Personnel) ஆகியோர்களுக்கு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி இந்திய தேர்தல் ஆணைய இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் (Randomization) பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# Kharge refers to PM Modi as terrorist, slams AIADMK over BJP alliance

*Congress chief Mallikarjun Kharge on Tuesday courted controversy after referring to Prime Minister Narendra Modi as a "terrorist" while criticising the All India Anna Dravida Munnetra Kazhagam for aligning with him.*

*Addressing reporters in Chennai, Kharge questioned the AIADMK's decision to join hands with the Prime Minister. "How these AIADMK people, who themselves put the photo of Annadurai, how can they join Modi? He is a terrorist. His party won't believe in equality and justice. These people are joining with them; it means they are weakening democracy."*



*"You need leaders who will not bow before the BJP and will stand up and fight, that is MK Stalin. Today, AIADMK has lost its identity. It has become a silent-slave partner of the BJP. It cannot protect Tamil Nadu's interest, because it has become a slave of PM Modi," he added.*

*He then clarified his statement saying he did not mean to call the prime minister a "terrorist" but meant that he "always terrorises" people and political parties.*

*"He (PM Modi) is terrorising people and political parties. I never said he is a terrorist... What I mean, I want to clarify, is that Modi always threatens. The institutions like ED, I-T and CBI are in his hands. He wants to take delimitation also into his hands," he said.*

*Kharge accuses PM Modi of violating Model Code of Conduct*

*Kharge also accused PM Modi of breaking the Model Code of Conduct by addressing the nation after the Constitution (131st Amendment) Bill, 2026 failed to pass in the Parliament. He further accused the Election Commission of acting like an extended arm of BJP.*

# மேற்கு வங்கத்தில் ஓட்டுப் போடாதவரின் பெயர் நீக்கப்படும் என்ற அச்சம்: ஊர் திரும்ப ரயில் நிலையங்களில் குவியும் தொழிலாளர்கள்



புதுடெல்லி:

மேற்கு வங்கத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியின்போது (எஸ்ஐஆர்) சுமார் 90 லட்சம் பெயர்களைத் தேர்தல் ஆணையம் நீக்கியது.

இவற்றில், கடந்த பிப்ரவரி 28 அன்று வெளியான இறுதி வாக்காளர் பட்டியலில் இருந்து நிரந்தரமாக சுமார் 63 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 27 லட்சம் பெயர்கள், சரிபார்ப்பு நடைமுறைகள் நிறைவடைந்த பிறகு நீக்கப்பட்டன.

இந்நிலையில், மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் வாக்களிக்காதவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு விடும் என்ற அச்சம் பரவலாக எழுந்துள்ளது.

இதனால், அம்மாநிலத்தின் புலம் பெயர் தொழிலாளர்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்புவது அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, நாட்டின் பல ரயில் நிலையங்களில் மேற்கு வங்க மாநிலங்களுக்கு செல்லும் ரயில்களில் கூட்டம் அலைமோதுகிறது. இவர்கள் தம் சொந்த ஊரின் முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் ஏப்.23–க்கு முன்னதாக வீடு திரும்ப முடிவு செய்துள்ளனர். இது, ஒரு மிகப்பெரிய அளவிலான புலம் பெயர்வு அலையாக தற்போது நிகழ்ந்து வருகிறது.

இந்த புலம் பெயர்வின் முக்கிய மையப் புள்ளியாக மால்டா மற்றும் முர்ஷிதாபாத் மாவட்டம் உருவெடுத்துள்ளது. இவர்களால், வழக்கத்திற்கு மாறாகப் பெருமளவு கூட்டம், சென்னை, மும்பை, கேரளாவின் பல் வேறு பகுதிகளில் நிலவுகிறது. இவர்கள் தம் தொலைதூர குடியிருப்புகளுக்காக 36 முதல் 72 மணி நேரம் வரை பயணம் செய்கின்றனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.